

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டக் கழகம் சார்பில், நாகர்கோவில் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில், இல்லம்தோறும் சென்று கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி 'ஓரணியில் தமிழ்நாடு' உறுப்பினர் சேர்க்கை மற்றும் பரப்புரை இயக்கத்தில் பங்கெடுத்து கழகத்தில் இணைந்தவர்களுக்கு உறுப்பினர் அட்டையை வழங்கினார். அதுபோது அமைச்சர் மனோ தங்கராஜ், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ், முன்னாள் அமைச்சர் என்.சுரேஷ்ராஜன், மகளிரணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

# கழக மக்களவை-மாநிலங்களவை உறுப்பினர்கள் கூட்டம்!

## பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு!



தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கழக மக்களவை - மாநிலங்களவை உறுப்பினர்கள் கூட்டம், 18.07.2025 வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு, சென்னை, அண்ணா அறிவாலயம், 'முரசொலி மாறன் வளாகத்தில்' உள்ள கூட்ட அரங்கில் நடைபெறும்.

அதுபோது, கழக மக்களவை - மாநிலங்களவை உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : நடைபெற உள்ள நாடாளுமன்ற கூட்டத்தொடர் - குறித்து

'அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018.
நாள்: 08.07.2025.

**துரைமுருகன்,**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.

### கடலூரில் பள்ளி வேன் மீது ரயில் மோதி விபத்து

# உயிரிழந்த மாணவர்களின் பெற்றோருக்கு ஆறுதல்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் இரங்கல் செய்தி!

**சென்னை, ஜூலை 9-**

**கடலூரில் பள்ளிவேன் மீது ரயில் மோதிய கோர விபத்தில் பலியான மாணவர்களின் பெற்றோருக்கு ஆறுதலையும், ஆழ்ந்த இரங்கலையும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

கடலூரில் பள்ளி வேன் மீது ரயில் மோதிய கோர விபத்தில் 3 மாணவ மாணவியர் உயிரிழந்த செய்தியறிந்து மிகுந்த வருத்தமுற்றேன்.

ஆயிரம் கனவுகளோடு பள்ளிக்கு சென்று கொண்டிருந்த இந்த மழலைகளின் மரணம் ஆற்றொணா துயரையும் வேதனையையும் தருகிறது.

இவ்விபத்தில் படுகாயமுற்றவர்களுக்கு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில் உரிய சிகிச்சைகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டு, பாதிக்கப்பட்டோருக்கு இழப்பீடுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

விபத்தில் பிள்ளைகளை இழந்து தவிக்கும் பெற்றோர்களுக்கு என்னுடைய ஆறுதலையும், ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது மாதிரியான விபத்துகள் இனியும் தொடராத வகையில் அனைத்து தரப்பிலிருந்தும் முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டிட வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### அரை நூற்றாண்டுக்கும் மேல் அரசியல் களத்தில் ஆற்றலை வெளிப்படுத்திய

# மொழிப்போர்த் தியாகி வி.சி.கோவிந்தசாமி மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் !

**சென்னை, ஜூலை 9-**

**அரை நூற்றாண்டுகளாக அரசியல் களத்தில் பல்வேறு பொறுப்புகளை ஏற்று தனது முழு ஆற்றலையும் வெளிப்படுத்தியவர் மறைந்த வி.சி.கோவிந்தசாமி அவர்கள் என்று குறிப்பிட்டு, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் செய்தி வெளியிட்டுள்ளார்.**

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி.சி.கோவிந்தசாமி அவர்களின் மறைவையொட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி.சி.கோவிந்தசாமி அவர்கள் உயிரிழந்த செய்தியறிந்து மிகவும் வருத்தமுற்றேன்.

ஒருங்கிணைந்த தருமபுரி மாவட்டத்தின் மூத்த அரசியல்வாதி, 1964-1965 கால கட்டத்தில் இந்தித் திணிப்புக்கு எதிரான போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்ற மொழிப்போர் வீரர் என அரைநூற்றாண்டுக்கும் மேல் அரசியல் களத்தில் பல்வேறு பொறுப்புகளை ஏற்று அதில் தனது முழு ஆற்றலை வெளிப்படுத்தியவர் கோவிந்தசாமி அவர்கள்.

திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளராக 1971, 1989 சட்டமன்றத் தேர்தல்களில் காவேரிப்பட்டினம் தொகுதியில் இருந்து வெற்றி பெற்றுத் தமிழ்நாடு சட்டப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், இனமானப் பேராசிரியர் ஆகியோருடன் இணைந்து இயக்கத்தில் பணியாற்றியவர். கோவிந்தசாமி அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், ஒருங்கிணைந்த தருமபுரி மாவட்ட தி.மு.கழகத்தினருக்கும் பொதுமக்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

### கோயம்புத்தூர் மாவட்டம் கொடிசியாவில்

# 100 புதிய பேருந்துகள் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு இயக்கம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கிவைத்தார்!

கோவை, ஜூலை 9-

கோயம்புத்தூர் மாவட்டம், கொடிசியாவில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோவை) சார்பில் 05.07.2025 சனிக்கிழமை அன்று நடைபெற்ற விழாவில் 100 புதிய பேருந்துகளின் இயக்கத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்தார். இவ்விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர், மாநகராட்சி ஆணையாளர் மா.சிவகுருபிரபாகரன், மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக், வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி, கோவை நாடாளுமன்ற உறுப்பினர் கணபதி முனைவர் ப.ராஜ்குமார், மாவட்ட துணைச் செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், கல்பனா செந்தில், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் ராஜேந்திரன், கோழிக்கடை கணேசன், மாநகராட்சி துணை மேயர் ரா.வெற்றிச்செல்வன், மண்டல் குழுத்தலைவர் கதிர்வேல், தமிழ்நாடு மின் கழக தொழிலாளர் முன்னேற்ற சங்க பொது செயலாளர், தொ.மு ச. இணை செயலாளர் பா.மணிமாறன், பீளமேடு பகுதி பொறுப்பாளர் ஏ.எஸ்.நடராஜ், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் கோவை மண்டல தலைவர் சிடிசி பி.துரைசாமி, பொதுச் செயலாளர் தொ.மு.ச க.பெரியசாமி, பொருளாளர் என்.எ.கணேசன், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் திருப்பூர் மண்டல தலைவர் ப.சென்னியப்பன், பொதுச் செயலாளர் ஜீவா கே.கே.துரைசாமி, பொருளாளர் சு.சின்னக்கண்ணன், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோவை) லிட் மேலாண் இயக்குநர் ஜி.செல்வன், பொதுமேலாளர் கே.செல்வக்குமார், தலைமை நிதி அலுவலர் சிவகுமார், முதுநிலை துணை மேலாளர் ராமகிருஷ்ணன் உள்பட கழக நிர்வாகிகள், அரசு போக்குவரத்து தொ.மு.ச நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

அமைச்சர் தெரிவித்ததாவது : தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தில் இயங்குகின்ற பழைய பேருந்துகளை மாற்றி புதிய பேருந்துகளை இயக்குவதற்கு உத்தரவிடப்பட்டு, அதற்கான நிதியை வழங்கி புதிய பேருந்துகள் வாங்கப்பட்ட நிலையில் நம்முடைய கோயம்புத்தூர் அரசு போக்குவரத்து கழக நிறுவனத்திற்கு 321 பேருந்துகள் 2024-2025 ஆம் ஆண்டுகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதில் ஏற்கனவே 155 பேருந்துகள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன. இன்றைய தினம் 100 புதிய பேருந்துகள் மக்கள் பயன்பாட்டிற்கு துவக்கி வைக்கப்பட்டுள்ளன. இதில் விடியல் பயண திட்டத்தில் மகளிர் கட்டணமில்லாமல் பயணம் செய்வதற்கு 96 பேருந்துகள் இயக்கப்படும். 4 பேருந்துகள் புறநகர் பகுதிகளில் இயக்கப்படும். இன்னும் 66 பேருந்துகள் விரைவில் கூண்டு கட்டப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும். 2025-2026 ஆம் நிதியாண்டிற்கு இன்னும் 252 புதிய பேருந்துகள் கோயம்புத்தூர் அரசு போக்குவரத்து கழகத்தில் இயக்கப்பட இருக்கின்றது. கடந்த காலங்களில் பழைய பேருந்துகளை இயக்கி புதிய பேருந்துகள் வாங்காமல் விட்ட நிலையில் தமிழகத்தில் திராவிட மாடல் ஆட்சி நடத்தும், இந்தியாவின் நம்பர் 1 முதல்வர், தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்திற்கு 11,000 பேருந்துகள் வாங்குவதற்கு உத்தரவிடப்பட்டு, படிப்படியாக அவை பயன்பாட்டிற்கு வந்து கொண்டிருக்கிறது. இன்று கோவை மாநகரில் இந்த அரசு போக்குவரத்து கழகத்திற்கு ஒரே நேரத்தில் 100 பேருந்துகள் இயக்கப்படுவது என்பது ஒரு மிகப்பெரிய சாதனையாக அமைகிறது.

கோயம்புத்தூர், மதுரை, சென்னை மாநகர போக்குவரத்து கழகத்திற்கென்று ஐந்து பேருந்துகள் வாங்குவதற்கான டெண்டர் விடப்பட்டு, டெண்டர் பிரிக்கப்பட்டு அதற்கான பரிசீலனை நடந்து வருகிறது. விரைவில் அவை முடிவற்ற பிறகு கோவைக்கு 80 பேருந்துகளும் மதுரைக்கு 80 பேருந்துகளுமாக மக்கள் பயன்பாட்டிற்கு மின்சார பேருந்துகள் வரும்.

விடியல் பயணத் திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர் கோட்டத்தில் 1,006 நகர பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. நாளொன்றிற்கு சுமார். 9.16 இலட்சம் மகளிர்கள் தினசரி கட்டணமில்லா பயணம் மேற்கொண்டு வருகின்றனர். உதகை, வால்பாறை, தாளவாடி மற்றும் ஆனைகட்டி மலைப் பகுதிகளில் 35 கிலோமீட்டருக்கு கீழ் இயக்கப்படும் 124 புறநகர் பேருந்துகளில் மகளிர்களுக்கு கட்டணமில்லா பயணம் செய்ய நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. நாளொன்றிற்கு மலைப்பகுதி புறநகர் பேருந்துகளில் சுமார் 0.47 இலட்சம் மகளிர்கள் தினசரி கட்டணமில்லா பயணம் மேற்கொண்டு வருகின்றனர் என அமைச்சர் தெரிவித்தார்.



தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க "ஓரணியில் தமிழ்நாடு" முன்னெடுப்பை வீடு வீடாகக் கொண்டு செல்லும் வகையில் சிங்காநல்லூர் சட்டமன்றத் தொகுதி, வார்டு எண் : 62, சாரமேடு பூத் எண் : 281 பகுதியில் மாநகர் மாவட்டச் செயலாளர், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக் தலைமையில் கழக உறுப்பினர் சேர்க்கையில் ஈடுபட்டனர். இதில் நஞ்சுண்டாபுரம் பகுதி பொறுப்பாளர் ஷேக் அப்துல்லா, மாநகர் மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் கோவை அபு, பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் சபீர் அலி, சாரமேடு இஸ்மாயில், அசாருதீன், செல்வராஜ் , பாபு, சுப்பு, இப்ராஹிம், கலாம், பூத் எண் 281 BLA2 செல்வராஜ் உள்பட BDA, இளைஞர் அணி, மகளிர் அணி, கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து இன்று வேலைநிறுத்தம்!

## தொ.மு.ச. பேரவை பொதுச் செயலாளர் மு.சண்முகம் எம்.பி. அறிக்கை!

சென்னை, ஜூலை 9 -

மக்கள் விரோத, தொழிலாளர் விரோத, விவசாயிகள் விரோத, ஜனநாயக விரோத, ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து, இன்று (ஜூலை 9 ) நடைபெறும் வேலை நிறுத்தத்தில் பங்கேற்பீர் என்று தொ.மு.ச. பேரவை பொதுச் செயலாளர் மு. சண்முகம் அறிக்கை வெளியிட்டுள்ளார்.



இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

இந்திய நாட்டின் ஆட்சி அதிகாரத்தை மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசு பொறுப்பேற்றது முதல் தொழிலாளர்களின் பிரச்சினைகளை விவாதிப்பதற்கு இந்தியா சுதந்திரம் அடைந்ததற்குப்பின் தொடர்ச்சியாக நடைபெற்று வந்த 'இந்தியா தொழிலாளர் மாநாடு" 2015ம் ஆண்டு முதல் கூட்டப்படவில்லை.

இந்திய நாட்டு தொழிலாளிகள் 100 ஆண்டுகளுக்கு மேலாக போராடி பெற்ற பணியிட பாதுகாப்பு, சமூக பாதுகாப்புச் சட்டங்கள் அனைத்தும் முழுமையாக தொழிலாளர்களுக்கு பயன் தரவில்லை என்றாலும், அந்தச் சட்டங்களை முன்வைத்து, தங்கள் உரிமைகளை பெற்று வந்தனர். அத்தகைய 44 சட்டங்களில் 29 சட்டங்கள் நான்கு தொகுப்புகளாக மாற்றப்பட்டுள்ளன.

இச்சட்டங்கள் தொகுக்கப்படும்போது, 2வது தொழிலாளர் ஆணையம் பரிந்துரைத்த அடிப்படையில் திருத்தங்கள் செய்யாமல், சட்டங்களையே முழுமையாக மாற்றி அமைத்து இந்நாட்டு, பன்னாட்டு முதலாளிகளுக்கு ஆதரவாக சட்டங்களின் வரைவு நகல் உருவாக்கப்பட்டன. சட்டங்கள் தொழிற்சங்கங்களோடு முறையாக கலந்து ஆலோசிக்கவில்லை. தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் இந்திய அரசியலமைப்பு சட்டத்தில் ஒத்திசைவு பட்டியலில் உள்ளது.

தொழிலாளர் நலன் சார்ந்த பிரச்சினைகளை மாநில அரசுகளே பெரும்பான்மையாக கவனித்து வருகின்றன. அத்தகைய மாநில அரசுகளை வரைவு சட்ட நகல்கள் மீது உரிய கலந்தாலோசனை நடைபெறவில்லை. சட்டங்கள் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்த போது, விவசாயிகளுக்கு எதிரான மூன்று சட்டங்களைக் கண்டித்து, இந்தியா கூட்டணி கட்சிகள் நாடாளுமன்றத்துக்கு வெளியே போராட்டம் நடத்திக் கொண்டிருந்த நேரத்தில், 100 ஆண்டு போராடி பெற்ற தொழிலாளர் சட்டங்களுக்கு மாற்றான நான்கு தொகுப்புச் சட்டங்களை சில வினாடிகளில் பா.ஜ.க. அரசு நிறைவேற்றியது. இதனை தொடர்ச்சியாக தொழிற்சங்கங்கள் எதிர்த்து போராடி வருகின்றன.

இச்சட்டத் தொகுப்புகள் நடைமுறைக்கு வந்தால், சற்றேறக்குறைய

80 சதமான தொழிலாளர்கள் சட்ட வரம்புக்கு வெளியே இருப்பார்கள் என்கிற அபாயமும், அதன் காரணமாக வேலை நீக்கம், ஆட்குறைப்பு, ஆலை மூடல் போன்றவைகளுக்கு அரசின் அனுமதி பெறாமலேயே நடைமுறைப்படுத்த முடியும் என்கிற அபாயமும் உள்ளது.

தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண்கள் தங்களின் குழந்தைகளை பராமரிக்கும் அமைப்பு தொழிலகங்களில் ஏற்படுத்த வேண்டும் என்கிற விதி இச்சட்டத் தொகுப்பின் மூலம் நீர்த்துப்போக செய்யப்பட்டுள்ளது. அபாயகரமான தொழிலில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு உடனடி மருத்துவ சிகிச்சை பெறுவதற்கேதுவாக தொழிற்சாலைகளில் 'ஆம்புலன்ஸ்" இருக்க வேண்டும் என்கிற பிரிவும் நீர்த்துப்போக செய்யப்பட்டுள்ளது.

குறித்த கால வேலை (Fixed Term Employment) என்கிற பிரிவை இணைப்பதன் மூலம் தொழிலாளர்கள் வேலை நீக்கத்தின்போது எந்த உரிமையும் கோர முடியாது என்கிற அபாயம் ஏற்படும். தொழிற்சாலைகளில், நிறுவனங்களில் தொழிலாளர்கள் மீது எடுக்கப்படும் ஒழுங்கு நடவடிக்கை மீது தொழிற்தகராறு எழுப்புவது என்பது இச்சட்டத் தொகுப்புகளில் கடினமாக்கப்பட்டுள்ளது.

தொழிற்சங்கங்கள் துவங்குவதற்கு 10 சதமான தொழிலாளர்களின் ஆதரவு இருக்க வேண்டும். 20 சதமான தொழிலாளர்களின் ஆதரவு இருந்தால் மட்டுமே தொழிலாளி தொடர்பான பேச்சு வார்த்தைகளில் பங்குபெற முடியும். 51 சதமான தொழிலாளர்களின் ஆதரவு இருந்தால் மட்டுமே அங்கீகரிக்கப்பட்ட சங்கமாக கருத முடியும் என இச்சட்டத் தொகுப்பு கூறுகிறது. இந்த ஆதரவு நிலை அனைத்தும் சரிபார்க்கும் முறையிலேயே (Verification Method) செய்யப்படும் என இச்சட்டத் தொகுப்பு கூறுகிறது. இதன் காரணமாக முதலாளி விரும்பும் சங்கம் மட்டுமே இருக்கும். தொழிலாளி விரும்பும் சங்கங்கள் இனி இருக்காது என்ற நிலை உருவாகும்.

மோட்டார் வாகனச் சட்டம் திருத்தப்பட்டதன் காரணமாக பொதுப் போக்குவரத்து என்கிற அமைப்பை பாதுகாப்பற்றதாக மாற்றப்பட்டுள்ளது. உரிமம் பெறுவதற்கான கட்டப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளது. ஒரு பேருந்துக்கான உரிமத்தைப் பெற்று, விரும்பும் வழித்தடங்களில் எல்லாம் பேருந்தை இயக்கும் சூழலை தனியாருக்கு சாதகமாக நிறைவேற்றப்பட்டுள்ளது. மோட்டார் வாகனச் சட்டத்தில் ஒருங்கிணைப்பாளர் (Aggregator) என்ற பிரிவும், அனைத்துப் பகுதிகளையும் இணைக்கும் (Last mile connectivity) என்ற பிரிவும், பொதுப் போக்குவரத்தை குறிப்பாக ஆட்டோ மற்றும் டாக்சி ஓட்டும் தொழிலாளர்களைப் பாதிக்கும் ஓலா (Ola) ஊபர் (Uber) ராபிட்டோ (Rapido) போன்றவைகள் போட்டியாக உருவாக்கியது மட்டுமல்ல, பயணிகளின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாகவும் அமைந்துள்ளது.

அண்மையில் திருத்தப்பட்ட மூன்று குற்றவியல் சட்டங்கள் பாரதிய நியாய சன்ஹிட்ட பிரிவு 111-ன்படி தொழிற்சங்கங்களின் நடவடிக்கைகள் மீது புகார் தருவதும், அதன்மீது ஒழுங்கமைக்கப்பட்ட குற்றம் (Organized Crime) சுமத்தும் நிலை ஏற்பட்டுள்ளது. மோட்டார் வாகன விபத்துக்களை மிகக் கடுமையாக தண்டிக்கும் பிரிவு 106(1) மற்றும் பிரிவு 106(2) போன்றவை 10 ஆண்டுவரை சிறைத்தண்டனை விதிக்க வகை செய்யப்பட்டுள்ளது, தற்போது நிறுத்தி வைக்கப்பட்டதாக ஒன்றிய அரசு கூறுகிறது. ஆனால் சட்டப்புத்தகத்தில் அப்பிரிவு இன்றும் உள்ளது. இது போன்று பல்வேறு அபாயங்கள் ஒன்றிய மோடி அரசால் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

ஒன்றிய அரசு கொண்டு வந்துள்ள நான்கு சட்டத் தொகுப்புகளை திரும்பப் பெற வலியுறுத்தியும், காலிப் பணியிடங்களை நிரப்பிட வலியுறுத்தியும், விலைவாசியை கட்டுப்படுத்தவும், பொதுத்துறைகளை தனியாருக்கு தாரை வார்க்காதே! பொதுத்துறை பங்குகளை விற்காதே! என்கிற அடிப்படை பிரச்சினைகளை முன் வைத்து உருவாக்கப்பட்டுள்ள 17 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தியும் இன்று (ஜூலை 9) நடைபெறும் வேலை நிறுத்தத்தில், அனைத்து பிரிவு தொழிலாளர்களும் கலந்து கொண்டு வெற்றி பெறச் செய்ய வேண்டுமாய் தொ.மு.ச. பேரவை சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



தேனி வடக்கு மாவட்டம் தேனி தெற்கு ஒன்றியம் வீரபாண்டியில் ஓரணியில் தமிழ்நாடுபுதிய வாக்காளர்கள் சேர்ப்பு வீடு வீடாகச் சென்று வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. துவக்கி வைத்தார். உடன் தேனி தெற்கு ஒன்றிய செயலாளர் ரத்ன சபாபதி, போடி தொகுதி பார்வையாளர் நேரு பாண்டியன், வீரபாண்டி பேரூர் செயலாளர் செல்வம், பேரூராட்சி தலைவர் கீதா சசி மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.